நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

HE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

காகம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 19    (01 - 06 - 1992)    திங்கட்கிழமை    ஓசை: 1 4

## அம்புலன்ஸ் மீது தாக்குதல் செஞ்சிலுவை முறைப்பாடு

தெல்லிப்பளைப் பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையின் போது அங்கு காயமடைந்த பொதுமக்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிவருகின்ற அம்புலன்ஸ் ஒன்று தாக்குதலுக்குள்ளானது தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ்வண்டி மீது சிறிலங்காவிமானப்படையின் உலங்கு வானூர்தி தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதல் சுன்னாகத்திற்கும் மருதனாமடத்திற்கும் இடையில் வைத்து நடாத்தப்பட்டது. எனினும் அம்புலன்ஸ் வண்டிக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. இத் தாக்குதல் குறித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் ண்டுவீச்சால் இடிந்து நொருங்கியது

## விக்கிரகங்கள் சேதமடைந்தன
## தர்கள் 5 பேர் சிதறிசாவு; 20 பேர் காயம்

- அலுவலக நிருபர் சசி

தெல்லிப்பழை துர்க்கை அம்மன ஆலயத்தின் மீது நேற்று சிறிலங்கா அரசு விமா... டை விமானங்கள் அகோர குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தியுள்ளன. இத் தாக்கு... ஆலய வசந்த மண்டபம் உட்பட ஆலயத்தின் பெரும் பகுதி முற்றாக இடிந்தன. ...த்திலுள்ள வழிபாட்டு வி கிரகங்களும் சேதமடைந்தன. அங்கு வழிபட்டுக்கொண்டு ...ற பக்தர்கள் ஐவர் உடல் சிதறிப் பலியாகியதுடன் 20 க்கு மேற்பட்டோர் படுகாயம் ...டைந்தனர். அண்மையிலுள்ள அகதிமுகாமிலிருந்தும் வீடுகளிலிருந்தும் வந்து ஆலயத் ...ல் தஞ்சமடைந்திருந்தோரில் ஆயிரக்கணக்கான மக்கள் சிதறி ஓடினர்.

...ண்பகல பன்னிரண்டு ...ளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை வட்டமிட்டு வீசிய 5 பீடபாக் குண்டுகளினால் ஆலயம் பல த... சேதமடைந்தது. வலிவட... ன் பல பகுதிகளிலுமிருந்து ...ம் பெயர்ந்த இரண்டாயி... லத்திலேயே கொல்லப்பட்டனர். வசந்த மண்டபம், முன் மண்டபம் உட்பட ஆலயத்தின் அனைத்துப் பகுதிகளும் பலத்த சேதமடைந்தன. இதன்போது கோபுரத்தின் கீழ் தங்கியிருந்தோரே பலியானவர்களாவர் இரண்டா... குண்டு வீழ்ந்து வெடித்ததைத் தொடர்ந்து பலியானவர்கள் காயமடைந்தவர்களையும் கைவிட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இவ் வேளை மூன்றாவது குண்டு பொங்கல் மண்டபத்தில் மீது வீழ்ந்து வெடித்தது. ...நாலாவது குண்டு ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள அகதிமுகாம் மீது வீழ்ந்து வெடித்ததில் 119 குடும்பங்கள் ...முமாக இம்முகாம் குடிசைகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரம் மீது அதிகாலையில் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரத்தின் மீதும் அதனை அண்டிய கரையோரப் பகுதி மீதும் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலினால் பத்து அப்பாவிப் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். பல பொதுமக்களின் வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 5 00 மணியளவில் மண்டைதீவு, அல்லப்பிட்டிப் பகுதியிலிருந்து மேற்படி பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மற்றும் பீரங்கித் தாக்குதல், ஆகியவை தொடர்ச்சியாக நடாத்தப்பட்டதுடன் கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இடைவிடாத தாக்குதல்களால் நகரப்பகுதி அதிர்ந்தது.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் துடிதுடித்து எழுந்து பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். பொம்மைவெளி கொட்டடி ஆகிய பகுதியைச் சேர்ந்த மக்கள் கையில் அகப்பட்ட தமது உடைமைகளை வாரிச் சுருட்டிக்கொண்டு ஓட்டுமடம், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த பெண்கள், கைக்குழந்தைகள், முதியவர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆறுகால்மடம், ஓட்டுமடம் ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் காயமடைந்த ஒன்பது பேர் விபரம்

(யாழ்ப்பாணம்)

...ன பல பகுதிகளிலுமிருந்து ...ம் பெயர்ந்த இரண்டாயி ...த்திற்கு மேற்பட்ட பொது ...கள் ஆலயத்தினுள் தஞ்ச ...ந்திருந்த வேளையில் இக்குண்டு வீச்சு நிகழ்ந்தது.

ஆலயத்தினுள் வீசப்பட்ட முதலாவது குண்டு வீழ்ந்து வெடித்ததினால் ஐவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் ... கீழ் தங்கியிருந்தோரே பலியானவர்களாவர். இரண்டாவது குண்டும் வசந்தமண்டபப் பகுதிக்குள்ளேயே வீழ்ந்து வெடித்ததில் விக்கிரம் உட்பட கட்டடங்கள் சேதமாகின. இச்சம்பவங்களின்போது இருபதிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். முதலாவது குண்டு ... மண்டபத்தின் மீது வீழ்ந்து வெடித்தது. இதனால மண்டபம் பலத்த சேதமடைந்ததுடன் இப்பகுதி சுடுகாடு போல் காட்சியளிக்கிறது. இதன் அருகிலிருந்த வீடுகள், திருமுறைமடம் கலியாண மண்டபம் ஆகியன பலத்த சேதமடைந்தன.

# வலி. வடக்கில் தொடர்ந்து அகோர ஆகாய தாக்குதல்

## மூவர் பலி; 20க்கு மேற்பட்டோர் காயம்

...விகாமம் வடக்கில் அமைந்...ள ஆலயங்கள், ஆல...கள், வைத்தியசாலைகள், ...ன் குடியிருப்புகள் மற்றும் ...க நிலையங்கள் மீது ...கா விமானப்படை...ள் மேற்கொண்ட ...குண்டு வீச்சு மற்றும் ...தாக்குதல்களி...பொதுமக்கள் பலி ...இருபதிற்கும் ...ர் படுகாயமடை...துடன் பல கோடி ...தியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. வலிகாமம் வடக்கில் இரண்டாவது நாளாக நேற்றுக் காலை 8.00 மணிக்கு ஆரம்பமான இத் தாக்குதல்கள் மாலை நான்கு மணிவரை நீடித்தன.

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான வேவு விமானம் ஒன்று காலை எட்டு மணியளவில் கீரிமலை சேந்தான்குளம், இளவாலை, அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகள் மீது பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டதைத் தொடர்ந்து பலாலி மற்றும் காபர்வியூ ஹோட்டல் சிறி...

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று வலிவடக்கில் ...மான ஆறுபேர் விபரம்

(...ணம்)

...நேற்று சிறி...படைகளும் ...டாத்திய கூட்டுத் ...தலில் ஆறு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்ட...

...பளை துர்க்கை ஆலயத்தில் மீதுகாலை ...விமானப்படை நடாத்தப் ...குண்டு வீச்சின் போது ...துகாப்புததேடி ஆலய கோபுரத்தின்கீழ் ஞ்ச...இருந்த ஐயர் ...ல ...ஊர். ...வ. வினோத (வயது 14) இவரது ...தகுமாரி (வயது 10) ...ரும் பரமானந்தம் ...9) என்பவருமே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இவர்களை விட இச் சம்பவத்தில் பலர் பலத்த காயமடைந்...

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆலயம் மீது குண்டுவீச்சு இந்துசமயப்பேரவை கவலை

(யாழ்ப்பாணம்)

புகழ்பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் தேவஸ்தானத்துடன் இணைந்த மண்டபங்களும், அனாதைகள் இல்லமும் விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால் சேதமடைந்தமை குறித்தும், வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் பலர் காயமடைந்தும், மூவர் உயிரிழந்தது குறித்தும் இந்துசமயப் பேரவை கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளது.

வலிவடக்குப் பிரதேசத்திலும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதையும், உயிரிழப்புகளையும், சேதங்களையும் உடனடியாக நிறுத்தும்படி பேரவை அரசைக்கேட்டுள்ளது.

## ஆஸ்பத்திரிகள் மீதும் குண்டுவீச்சுத் தாக்குதல்

சிறிலங்கா குண்டுவீச்சுவிமானங்கள் வைத்தியசாலைகள் மீதுமேற்கொண்ட கொடூரக் குண்டு வீச்சுக்களினால் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை தரைமட்டமாகியதுடன் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையும் பலத்த சேதமடைந்தது.

நேற்றுமாலை மூன்று மணியளவில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனைமீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் மேற்படி வைத்தியசாலை தரைமட்டமாகியது. கட்டடம் இருந்த இடமே தெரியாதளவிற்கு பாரிய சேதத்தை இக்குண்டு ஏற்படுத்தியுள்ளது. வைத்தியசாலையின் உபகரணங்கள், தளபாடங்கள், ஆவணங்கள் அனைத்தும் சிதறிக் காணப்படுகின்...

[4 ஆம் பக்கம் பார்க்க]

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவை அண்டிய பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை, கோட்டை, கொட்டடி, குருநகர், தொலைதொடர்பு நிலையம் மற்றும் நகரின் பலபகுதிகளையும் நோக்கி பரவலான 50 கலிபர், ஆட்டிலறிஷெல, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இத்தாக்குதலில் 10பொது மக்கள் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. இத் தாக்குதலால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களிற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

சிவதர்சினி தங்கராசா (16 வயது) கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம், எஸ். சிவா [21 வயது] கே.கே எஸ் வீதி யாழ்ப்பாணம் ரி சிசுதன் [17 வயது] கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் இ. ஆர். தங்கராசா [60 வயது] கே.கே எஸ் வீதி. யாழ்ப்பாணம், ரி ராசலட்சுமி [50 வயது] கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் கே பிரதீபன் [9 வயது] ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் திருமதி எஸ்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் 3 நாள் மோதலில் 67 இராணுவத்தினர் பலி

## -2-வது படைத்தளபதி ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த மூன்று நாட்களில் நடைபெற்ற கடும் மோதல்களில் இராணுவ தரப்பில் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. தாக்குதலில் அதிகாரிகள் உட்பட பலர் உயிரிழந்ததுடன் பல இராணுவ கவசவாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் கடந்த மூன்று நாட்கள் நடைபெற்ற சண்டைகளில் இரு அதிகாரிகள் உட்பட 67 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் வலி வடக்கு பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களில் மட்டும் ஒரு அதிகாரி உட்பட 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாவது அணியின் இரண்டாவது தளபதியான மேஜர் செனநாயக்கா என்பவரே கொல்லப்பட்ட ஒருசிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "சுழல்காற்று" நடவடிக்கை ஒரு புதிய கட்டமாம்

(கொழும்பு)

வடபகுதியில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் தாக்குதல்கள் ஒரு புதியகட்டம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன இந்த நடவடிக்கைக்கு 'சுழல் காற்று'' என பெயரிடப்பட்டுள்ளது

பலாலி முகாமிலிருந்து புதிய இடங்களைக் கைப்பற்றி அவற்றைப் பலப்படுத்திய பின்னரே யாழ்ப்பாணம் நோக்கி முன்னேற இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுவனில் புலிகள் - இராணுவம் இரண்டாம் நாளாக உக்கிரமோதல்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன், வீமன்காமம் கசன்காடு, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரண்டாவதுநாளாகநேற்று உக்கிர மோதல்கள் இடம் பெற்றுள்ளது

மேற்படி பகுதிகளில்அமைந்திருக்கும் இராணுவக் காவல் அரண்களில் இருந்து சரமாரியான தாக்குதல்களை நடாத்திய வண்ணம் முன்னேற முயன்ற இராணுவ படையணிகளுக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் குண்டுத் தாக்குதல நடாத்திக் கொண்டிருந்தன அதேவேளை பலாலி முகாமிலிருந்து இடைவிடாத ஆட்லறி ஷெல் தாக்குதல்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வலி.வடக்கில் காயமடைந்த பொதுமக்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

...காமம் வடக்குப் பகுதி ...வேறு பகுதிகள் மீது நடாத்தப்பட்ட சிறி...படைகளின் குண்டுத் ...களினால் நாற்பதுக் ...ற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்திருக்கின்றனர்.

தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், ஏழாலை, அம்பனை, கட்டுவன், பன்னாலை, அளவெட்டி ஆகிய பகுதிகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்கில் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன், வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் மேஜர் எழிலமுதன் (கதிர் நமசிவாயம் உமாசுதன் கூளாவடி, ஆனைக்கோட்டை – மானிப்பாய்), லெப்டினன் புகழேந்தி (நித்தி - சிவசுப்பிரமணியம் சம்பூர்நாதன் சில்லாலை மேற்கு, பண்டத்தரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லையில் யுத்தம் தணிவு

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று சண்டைகள் தணிந்திருந்ததாக சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன

குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும்நடைபெறவில்லை என மேலும் அவை தெரிவித்தன.

## வீரச்சாவு

### வீரவேங்கை அறிவொளி வீரவேங்கை முகிலன்

முல்லைத்தீவு ஐந்தாம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம் பெற்றுவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் வீரச்சாவு

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் தீரமிகு தாக்குதல்களின் போது நேற்று முன்தினம் மேஜர் பிரேமச்சந்திரன் (ஏழுமலையர் தேவேந்திரன் சிவபுரி திருகோணமலை) லெப்டினன் மகிந்தன் (முருகேசபிள்ளை ஸ்ரீதரன் பழைய கமம் முரசுமோட்டை பரந்தன்) 2ம்லெப்டினன் சிவம் துரைச்சாமி ராஜேந்திரன் ஜெயந்திநகர் கிளிநொச்சி) வீரவேங்கை முல்லைவேந்தன் (அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயக்குமார் சிலாவத்தை முல்லைத்தீவு) ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நூல், ஆவணம் சேகரிக்க மாணவர் இயக்கம் திட்டம்

1981 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் முதலாம் திகதியன்று சிங்களக் காவல் துறையின ரால் யாழ்ப்பாண நூலகம் தீயிடப்பட்டதை நினைவு கூரும் முகமாக ஆனி மாதம் முழுவதையும் நூலக மாத மாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அறிவித் துள்ளது.

இது தொடர்பாக 'அறி வினை எரித்து அழிந்தவரை அறிவால் எதிர்த்து அழிப் போம்' என்னும் தலைப்பில் செய்திக் குறிப்பு ஒன்றையும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வெளியிட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் சிதறிக் கிடக்கும் அறிவுக் கருவூலங் களை ஒன்று திரட்டி சமூக தேசிய விடுதலை காண விழை யும் எம் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் முகமாக கல்வெட் டுச் சான்றுகள், கையேட்டுப் பிரதிகள், ஆவணங்கள் நூல் கள் என்பவற்றைச் சேகரிக்கவும் மாணவர் இயக்கம் திட்டமிட் டுள்ளது.

எனவே இவற்றை அன்பளிப் புச் செய்ய விரும்புவோர் தத் தம் பகுதியிலுள்ள மாணவர் இயக்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் படியும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது.

Eswara Bagawaan & Company

கண்டோஸ் / கட்பரீஸ்

**Candos / Cadbury's**

சொக்கலேற் வகைகள் அதில் குறிப்பிட்டுள்ள விலையில் விற்பனைக்குண்டு.

**ஈஸ்வர பகவான் அன் கம்பனி**

104 (298) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-2618]

இசைமாலை நிகழ்ச்சி

எதிர்வரும் 15 - 06 - 92 முதல் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

செஞ்சோலைக் குழந்தைகளும் போராளிகளும் இணைந்து வழங்கும்

சப்தஸ்வராவின்

**இசைமாலை நிகழ்ச்சி**

பின்வரும் இடங்களில் நடைபெறும்

இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்

சென். ஜோன்ஸ் கல்லூரி சுண்டுக்குளி

# முல்லை மண்ணில் ஆக்கிரமிப்பாளரை அடக்கியோர்



மேஜர் பிறேமச்சந்திரன்
அழகையா கவேந்திரன்
சிவபுரி, திருமலை



கப்டன் குட்டி (அன்பு)
ஐயம்பிள்ளை சிவகுமார்
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்



லெப். மறவன் (சுலோஜன்)
பாக்கியதுரை தயாளசீலன்
7 ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்



லெப்டினன் ராஜன்
அன்னலிங்கம் மதியழகன்
உடுவில் தெற்கு, மானிப்பாய்



லெப். நந்தன்
செல்லையா சந்திரன்
கொழும்பு, தெமட்டகொட, (கண்டிவீதி, பனிக்கங்குளம் மாங்குளம்)



லெப். மகிந்தன்
முருகேசபிள்ளை ஸ்ரீதரன்
பழயகாமம், முரசுமோட்டை, பரந்தன்

தமிழகத்தில்

## இடி மின்னல் தாக்கியதால் எண்மர் மரணம்

(சென்னை)

தமிழ் நாட்டில் விழுப்புரம் அருகே காஞ்சிரம் பாளையம் கிராமத்தில் வீட்டிற்குள் தூங் கிக் கொண்டிருந்தவர்களை மின்னல் தாக்கியதால் அக்குடு ம்பத்தைச் சேர்ந்த ஐவர் உயி ரிழந்தனர், நேற்று முன்தின மிரவு நடைபெற்ற இக்கோ ரச் சம்பவத்தில் உயிரிழந்தவ ர்களில் பத்து வயது நிறைந்த ஆண் குழந்தை ஒன்றும் நான்கு வயது பெண்குழந்தை ஒன்றும் அடங்கும்.

இவர்கள் தங்கியிருந்த வீடும் பலத்த சேதமடைந்ததாக காவல்துறையினர் கூறியுள்ள னர்.

இதேவேளை திருச்சிக்கு அருகே காட்டூரில் விளையா ட்டு மைதானத்தில் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களில் மூவர் இடி மின்னல் தாக்கியதால் மர ணம் அடைந்துள்ளனர்.

மற்றுமொரு சம்பவத்தில் திருச்சிக்கு அருகே திருமான் ஊரில் கிணற்றில் இறங்கிய நால்வர் விஷவாயு தாக்கி உயி ரிழந்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

வீரஜெனனம் 1966 - 07 - 16



வீரச்சாவு 1992 . 05 . 31

மேஜர் பிரேமச்சந்திரன்
(அளகையா கவேந்திரன்)

முழங்கும் வேட்டுகள் ஈழவிடுதலை முரசுகள் எல்றே
எழுந்தான் வேங்கை போர்க்களம் காண - அவன்
கொட்டிய குருதியில் குளித்த இம்மண்
எட்டும் விடுதலை இனிவரும் நாளில்.

16/5 சிவபுரி
திருக்கோணமலை. [சி/4487]

நண்பர்கள்


நினைவுகூருகின்றோம்...

கைலாசபதி கலையரங்கு யாழ்.பல்கலைக்கழகம்
காசிப்பிள்ளை அரங்கு அரியாலை
இந்துக்கல்லூரி சாவகச்சேரி
மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கந்தரோடை
சைவப் பிரகாச வித்தியாசாலை உரும்பராய்
சிவப்பிரகாச வித்தியாசாலை சங்கானை
திருநாவுக்கரசு வித்தியாலயம் கொடிகாமம்
அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி
சோமஸ்கந்தா புத்தூர்
மத்தியகல்லூரி நெல்லியடி
பஸ்ராண்ட் பருத்தித்துறை
அம்மன்கோயில் வீதி வல்வெட்டித்துறை
தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்

குறிப்பு : நிகழ்ச்சி நடைபெறும் தினங்கள் தொடர்ச்சியாக பத்திரிகைகள், வானொலி, ஒலிபெருக்கி மூலம் அறியத்தரப்படும்.

(சி/4484) -செஞ்சோலை நிர்வாகிகள்

## 3-ம் ஆண்டுநினைவஞ்சலி



பிறப்பு 1 - 3 - 1971

அழிப்பு 1 - 6 - 1989

### நாகரெத்தினம் ஆனந்தராஜா
### (ஆனந்தி) யாழ்.வைத்தீஸ்வரா மாணவன்

1989-ம் ஆண்டு தேசவிரோத கும்பலால் அழிக்கப்பட்ட எமது குலவிளக்கு ஆனந்திக்கு நமது கண்ணீர் அஞ்சலி.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்

பால்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(2620)

30- 05- 1992 அன்று காலை 8.30 மணிமுதல் முள்ளைத்தீவு ஐந்தாம் கட்டையிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வீராவேச தாக்குதல்களால் இராணுவத்தினரின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இத்தீரமிகு தாக்குதலில் 11 வீரவேங்கைகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.



2-ம் லெப்.சடயன் (சுதா)
குருசாமி யோகபாலன்
சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

விடுதலைப் புலிகள் தமிழீழ
Liberation Tigers Of TAMIL EELAM



2ஆம் லெப். சிவம்
துரச்சாமி ராஜேந்திரன்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



வீரவேங்கை
குலேந்திரன்
கனகரத்தினம்
சாந்தகுமார்
துர்க்காவீதி, 4ஆம் வட்டாரம்
அரசடி வீதி, புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.



வீரவேங்கை வெற்றி
செல்வசீலன் புன்னியராஜ்
ரம்பைக்குளம், ஓமந்தை
வவுனியா



வீரவேங்கை
முல்லைவேந்தன்
அந்தோனிப்பிள்ளை
அன்ரன் ஜெயக்குமார்
சிலாவத்தை, முல்லைத்தீவு

## 1992-06-01

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய
★ சிவரெத்தினம் சச்சிதானந்தம் (30-ஏக்கர்)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படை முகாமில தடுத்து வைக்கப்பட்டு காணாமல் போன தமிழ்ப்பொதுமகன்

1986ஆம் ஆண்டு யாழ். கோட்டை முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 2 சிறுவர்கள், 2 பெண்கள்

1987ஆம் ஆண்டு கோப்பாய் பாலத்தடியில் பாரவண்டி ஒன்றின்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மயிலம்பா வெளிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய -

லெப்.மனோ [காத்தமுத்து சின்னராசா - ஆரையம்பதி, மட்டக்களப்பு]

அம்பாறை, தம்பலவத்தைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

தீபன் [சி. குகநாதன் - சின்னவத்தை, அம்பாறை]

உரும்பராயில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

பாக்கியம் அக்கா [கந்தையா பாக்கியம் - சிவன்வீதி, உரும்பராய் கிழக்கு]

யாழ். நல்லூரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

கதிரிப்பிள்ளை நடராசா (மூத்தவினாயகர் கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான பிரஜைகள் குழுப்பிரமுகர் -

விஜயநாயகம் விஜயகுமார் (தொண்டமானாறு)

ஏழாலை வடக்கில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

திருமதி சிவஞானபதி சிவசுப்பிரமணியம் (ஏழாலை வடக்கு)

திருமதி செல்வராணி உருத்திரசிங்கம்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதிகளில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட - இளைஞன் உட்பட, 2 தமிழர்கள். மற்றும், பருத்தித்துறையில் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கிரான்குளிப் பகுதியில் தமது வீட்டில் குளித்துக்கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொலலப்பட்ட தந்தை - மகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4483)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

பலவீனமானவர் பாதையில் தடைக்கல்லாய் நிற்கும் கருங்கல் பாறை, பலமானவர் பாதையில் படிக்கல்லாய் பயன்படும்.

- தாமஸ் கார்லைல்

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 01-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 68

## நேரெதிர் திசையில் சொல்லும் செயலும்

வவுனியாவில் இடம் பெற்ற இடம் பெயர் சேவையை ஆரம்பித்து வைத்துப் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி தமிழ் மக்கள் மீதுதான் கொண்டுள்ள ''பற்றையும், பாசத்தையும்'' வெளிப்படுத்தி நீண்ட தொரு உரை நிகழ்த்தினார். கேட்பதற்குத் தித்திக்கும் இப்பேச்சில் இடம்பெற்ற பகுதிகள் சில.

''வடபகுதியைப் பிடிப்பதும், அதனை வெல்வதும் ஆட்சியைச் செய்வதும் எமது நோக்கமல்ல. நாம் வடக்கிலுள்ள சாதாரண மக்களுக்கு சேவை செய் யவே வந்துள்ளோம்''

''நாம் எவரையும் தோற்கடிக்க விரும்பவில்லை. ஒவ்வொருவரையும் வெற்றி பெறச் செய்வதே எமது குறிக்கோள். கருத்துப் பரிமாற்றம் மூலம், சமாதானத் தையும் அமைதியையும் ஏற்படுத்தவே இங்கு வந் துள்ளோம்''

சிறிலங்கா ஜனாதிபதி இவ்வாறாக வவுனியாவில் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் சிறிலங்கா இரா ணுவம், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், முல்லைத் தீவிலும் பாரிய தாக்குதலை நடத்திக் கொண் டிருந்தது. இத்தாக்குதலில் தமிழ்மக்கள் பலர் உயிரி ழந்ததோடு பெருமளவு சொத்துக்களும் நாசமாகி யுள்ளது.

# சிறுபான்மை அரசைக் காப்பாற்ற நரசிம்மராவ் பணிந்து போகிறார்

அரசியல் ரீதியான முரண் பாடுகள் இந் நாட்டில் ஆழ மாக வேரூன்றிவிட்டது. முக் கியமான மூன்று அரசியல் சக்திகளான காங்கிரஸ் கட்சி யும் அதன் தோழமை சக்தி களும், இடதுசாரிச் சக்தி களையும்உள்ளடக்கிய தேசிய முன்னணி, மற்றும் பாரதீய ஜனதாவும் அதனோடு இணை ந்த சக்திகளும் என இவ் இடைவெளி மேலும் மேலும் அதிகரித்துச் செல்கின்றது.

பிரதமர் நரசிம்மராவின் கருத்தொருமைப்பாடு காணும் அணுகுமுறை பற்றிய மாயை கள் மறைந்து வரத் தொட ங்கியுள்ளதுடன் குறைந்தளவு எதிர்ப்பைக் காட்டும் அவ ரது போக்கும் அம்பலமாகி யுள்ளது. ஏழ்மையான பழைய பிரச்சினைகள் மீண்டும் முன் னணிக்கு வரத்தொடங்கியுள் ளது.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விவகாரம் மீண்டும் செவிகளில் ஒலிக்கத் தொட ங்கியுள்ளது. பாராளுமன்றத் தில் இதுதொடர்பாக நடந்த கடுமையான விவாதத்தில் எதிர்க் கட்சிகளும் ஆளும் காங்கிரஸ் கட்சியும் சூடான வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டன. ''பிரதமரின் தூண்டுதலின் பேரிலேயே'' முன்னாள் வெளியுறவு அமை ச்சர் மாதவ்சிங் சோலங்கி சுவிஸ் அதிகாரிகளிடம் குறி ப்பு ஒன்றை அளித்ததாகக் கூறப்படும் விவகாரத்தில் பிர தமர் தன் நிலையை தெளி வாக வெளிப்படுத்தவில்லை. இது அவருடைய சிறுபான்மை அரசின் விம்பத்தை மேலும் சிதைந்துள்ளது எனலாம்.

இன்னும் கூட எதிர்க்கட்சி கள் தமது பதவி இறக்கு வதற்காக தமக்கிடையே ஒருங் கிணைவை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதையும் அந்த அளவிற்கு எதிர்க்கட்சி களைத் தான் சினமடையச் செய்யவில்லை என்பதையும் அவர் உணர்ந்து கொண்டுள் ளார்.

## கருத்து முரண்பாடுகள்

அயோத்தியாவில் பாபர் மசூதி அமைந்துள்ள அதே இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவது என்ற பாரதீய ஜன தாக்கட்சியின் அறிவிப்பு ஏற் கனவே நீறுபூத்த நெருப்பா கக் கிடந்த இப்பிரச்சினையின் சூட்டைக்கிளப்பியுள்ளது நர சிம்மராவ் இந்தப் பிரச்சனை யில் பாரதீய ஜனதாக்கட்சி யுடன் இணங்கிப் போகமாட் டார் என்பது தெளிவானதே

பாரதீய ஜனதாக்கட்சி கல ந்து கொள்ளாத ஒரு சர்வ கட்சி மகாநாட்டில் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இடத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப்படும் வரையில் எந்த மாறுதலும் செய்யப் படக்கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார், பாராளு மன்ற நூலகத்தில் இக் கூட் டம் இடம் பெற்றது. இதை யடுத்து பாரதீய ஜனதாக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக் கும் இடையே நேரடியான கருத்து முரண்பாடுகள்தோன் றியது ஆனால் இம்முறை இடதுசாரிகள் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

பீகார் முதல்வர் லல்லு யாதவ், உயர்நீதி மன்ற நீதி பதியின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்று கூறப்படும் புகார் பற்றியும் நரசிம்மராவ் அரசு தெளி வான நிலையைக் காட்ட வில்லை இது ஜனதா தளத் தை திருப்திப்படுத்தும் ஒன் றாகும் பீகாரில் ஜனதாதளம் கட்சியின் ஆட்சிக்கு ஆபத்து நேருவதைப் பற்றி அக்கட்சி ஏற்கனவே பிரதமரை எச்சரி த்திருந்தது (ஜனதா தளத்தி ற்கு இந்தியப் பாராளுமன்ற த்தில் 56 ஆசனங்கள் உண்டு)

> இந்தியாவின் அரசி யல்நிலைமைதொடர் பாக இந்தியாவில் பிரபல்யமான பத்தி ரிகையாளரும், அரசி யல் விமர்சகருமான குல்திப்நய்யார் கடந்த வெள்ளி யன்று 'ஐலன்ட்' இத ழில் எழுதிய கட்டு ரையில் இருந்து மொழியாக்கம் செய் யப்பட்டது.

உயர்நீதிமன்றநீதிபதி பீகார் முதல்வரால் ஏற்படும் ஆபத் துக் குறித்து மாநில ஆளுநரி டம் மேலதிக பாதுகாப்பு தரு மாறு கோரியதாக மாநில ஆளுநர் மொகமட்சாபி குரேசி கருத்து தெரிவித்து அவர் அளி த்த பத்திரிகைப் பேட்டிக்கு மறுப்புத் தெரிவிக்கும் படி புதுடில்லி அவரைக் கேட்டுக் கொண்டது. இது தொடர்பாக எழுதப்பட்ட கடிதத்தின்பிரதி பத்திரிகைகளில் வெளிவந் ததையடுத்து நரசிம்மராவ் அரசின் மதிப்பு மேலும் குறை ந்தது

இதே போன்றதான நிலை மையே தமிழ்நாடு சட்டமன்ற த்திற்கும், உச்சநீதிமன்றத்திற் கும்இடையிலானமோதலிலும் மத்திய அரசு கடைப்பிடிக்கின் றது.

உச்ச நீதிமன்றம், இரண்டு பத்திரிகையாளர்களைக் கைது செய்யும்படி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பிறப் பித்த பிடியாணைகளை இர ண்டு தடவைகள்ரத்துச்செய்த போதும் சபாநாயகர் அதனை உதாசீனப்படுத்திவிட்டார். மத்தியஅரசு தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவிடமிருந்து ஆச னங்களைஎதிர்பார்க்கவேண்டி இருப்பதால் இப் பிரச்சினை யில் வெறும் பார்வையாள ராக அவதானிக்கிறது.

புதுடில்லி இந்தப் பிரச்சி னையை குடியரசுத் தலைவரு க்கு பாரப்படுத்தியிருக்கலாம், அவர் அரசியலமைப்பின் 143-ம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத் தின் கருத்தைக்கேட்க அதுவழி சமைத்திருக்கும், இது போன்ற தொரு நிலைமை சில வருடங் களுக்கு முன்னர் அலகாபாதி உச்சநீதி மன்றத்திற்கும், உத் தரப் பிரதேச சட்டமன்றத் திற்கும், இடையில் ஏற்பட்ட போதும் இந்த வகையிலேயே அப்பிரச்சினை தீர்க்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நரசிம்மராவின் அரசுபதவி யில் நீடிக்கும் முறை மதிப்பளி ப்பதாக இல்லைபஞ்சாப்பும், காஷ்மீரும் பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வராமல் தொடர் ந்து இழுபடும் நிலையே நீடிக் கின்றது. பஞ்சாபில் ஒப்புக் காக ஒரு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டாலும் கூட காஷ்மீரில் அவ்வாறான ஒரு நிலைமை கூடஇன்னும் ஏற்படவில்லை.

நரசிம்மராவின் அரசுக்கு இப்பிரச்சினைகளில் பதற்ற த்தை தணிக்கக்கூடிய அல் லது பிரிவினை வாதிகளைத் தனிமைப்படுத்தக்கூடிய கொள்கை எதுவும் இருப்ப தாக தெரியவில்லை. துப்பா க்கி கலாசாரம் மேலும் சில மாநிலங்களுக்கு பரவியுள்ளது எனலாம்.

தீவிரவாதிகள், நக்சலைட் டுகள், சமூகவிரோதிகள் எனப் பலசக்திகளும் கலப்பட மாகி ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திப் பார்ப்பதும்— அவர்களது தத்துவ நோக்கு களை அல்லது கோரிக்கை களை வேறுபடுத்துவதும் கடி னமாகியுள்ளது.

இராணுவப்படையும், துணை இராணுவப்படைக ளும் பயன்படுத்தப்படும் அளவு முன்னரை விட அதிகரி த்துள்ள போதிலும் பொது மக்களிடையே பாதுகாப்பு குறித்து அச்சவுணர்வு மேலோ ங்கியுள்ளது.

# மேற்காசியாவிற்கு ஆயுத விற்பனை கட்டுப்பாடு விதிக்க உடன்பாடில்லை

## ஜெயலலிதாவின் விளம்பர மோகம்பற்றி கல்கி இதழ் சாடல்

யுள்ளது.

இந்நடவடிக்கையானது சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சும் செயற்பாடும் ஒன்றிற்கொன்று நேர் எதிர் திசையில் இருப்பதையே காட்டுகின்றது. அதாவது சிறிலங்காவில் நிலவும் பௌத்த தர்மத்திற்கும், பௌத்தர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பிரதிபலிப்பது போன்றுள்ளது.

வடபகுதியைப் பிடிப்பது எமது நோக்கமல்ல எனச் சிறிலங்கா ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவப் பேச்சாளரோ, வடக்கில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். இராணுவ பேச்சாளர் தெரிவித்தது போன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அவ்வாறானால், இராணுவம் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிப்பது என்பது வடபகுதியைப் பிடிப்பது ஆகாதா? அவ்வாறானால் ஓர் இனத்தின் தாயகப் பகுதியை ஓர் பேரினவாத இராணுவம் ஆக்கிரமிப்பதை எவ்வாறு தெரிவிப்பது?

கடந்த மூன்று நாள் இராணுவ நடவடிக்கையின் போது சுமார் இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளார்கள். அதேவேளை, ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்துள்ளார்கள். ஆனால், சிறிலங்கா ஜனாதிபதியோ தமிழ் மக்களுக்கு சேவை செய்யவேதான் வந்துள்ளதாகத் தெரிவிக்கின்றார். அவ்வாறானால் இவை எல்லாம் திரு பிரேமதாசா தமிழ் மக்களுக்கு செய்யும் சேவையாகக் கருதலாமோ?

மேலும், கருத்துப் பரிமாற்றமும், பேச்சுவார்த்தை மூலமும், சிறுபான்மை இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் எனக் கூறும் சிறிலங்கா ஜனாதிபதி போராடுபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையே விரும்பியதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினை தீர்விற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவிக்குழுவிற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இதன் மூலம், இனப் பிரச்சினைக்கு கருத்தொருமைப்பாட்டின்மூலம் தீர்வுகாணும் முயற்சிக்கு முன்னுதாரணமாக இருக்கவில்லை அத்தோடு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என முயற்சித்த அமைச்சர் தொண்டமானுக்கும், யாழ். வந்த பௌத்த குருமாருக்கும் திரு பிரேமதாசா ஆக்கபூர்வமான உதவியை அளிக்கவில்லை யாழ் போகிறேன், யாழ். போகிறேன் எனக் கூறிவந்த தொண்டமானை யாழ். வராமலே பிரேமதாசா தடுத்துவிட்டார். யாழ்.வந்து சென்ற பௌத்த பிக்குகளுக்கு முதன்மை அளித்து திரு. பிரேமதாசா அவர்களை சந்திக்கவில்லை. தட்டிக்கழித்தே வந்துள்ளார். அதாவது தமிழர் நிலைப்பாட்டை அறியவே அவர் விரும்பவில்லை. இந்நிலையில் கருத்து ஒற்றுமை, பேச்சுவார்த்தைமூலம்சமாதானத்தை எட்டலாம் என்று திரு. பிரேமதாசா கூறுகின்றார். மந்திரத்தால் சமாதானத்தைஎட்டிவிடலாம்என எண்ணுகின்றாரோ?

அதாவது, சிறிலங்கா ஜனாதிபதி சொல்லொன்று செயலொன்று என இரட்டைவேடம் போடுகின்றார். இதன் மூலம் தமிழ் மக்களை ஏமாளியாக்கப்பார்க்கின்றார். கடந்த கால தலைவர்களின் வாரிசாக சிங்கள பேரினவாத சக்திகளினதும், இராணுவத்தினதும் தலைவராகவே அவர் தற்பொழுதும் உள்ளார். இந்நிலையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு திரு. பிரேமதாசா இப்போதைக்கு தீர்வு கண்டுவிடப் போவதில்லை.

(வாஷிங்டன்)

மேற்காசியப் பிராந்திய நாடுகளுக்கு வழமையான ஆயுதங்கள் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்தும் முகமாக பிரிட்டன், சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு ஆகிய நாடுகள் நடாத்திய ஆலோசனையில் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

ஒரு ஆண்டுக்கு முன்பாக அமெரிக்கா தெரிவித்த இந்த யோசனையை அடுத்து மேற்கண்ட ஐந்து நாடுகளின் பிரதிநிதிகளும் அண்மையில் வாஷிங்டனில் ஒரு கூட்டத்தை நடாத்தினர். மேற்காசியப் பிராந்தியத்தின் கீழ் வரும் நாடுகள் எவை என்பது குறித்துக் கூட இந்த நாடுகளின் பிரதிநிதிகளும் உடன்பாடு எதையும் காணவில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களின் விற்பனையை உறுதியாக கட்டுப்படுத்த இந்த ஐந்து நாடுகளும் இணக்கம் தெரிவித்து உள்ளன அத்துடன் இரசாயன மற்றும் அணு ஆயுதங்களை எந்தவொரு நாட்டிற்கும் அனுப்புவதில்லை எனவும் இவ்வைந்து நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன. இத்தகைய ஆயுதங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தும் சாதனங்கள், பொருள்கள், மற்றும்தொழில்நுட்பத்தை மேற்காசிய நாடுகளுக்கு அனுப்புவதை இத்தகைய தடை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவின்

# அக்னிஏவுகணை சோதனை அமெரிக்கா கவலை

[வாஷிங்டன்]

இந்தியா தனது 'அக்னி' ஏவுகணையை இரண்டாவது தடவையும் பரிசோதனை நடாத்தியதையிட்டு அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது.

14 தொன் நிறையும் 60 அடி நீளமும் 1500 மைல் பாயக் கூடியதுமான இந்த ஏவுகணை இந்தியாவின் கிழக்கு கரையில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஏவப்பட்டது தெரிந்ததே.

இதனால் இந்தியாவின் அயல் பிராந்தியத்தில் பாதுகாப்புக்கு நெருக்கடி ஏற்படும் என தாம் நம்புவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று யுத்தங்களில் இதுவரை பங்குபற்றி உள்ளது. தெற்காசியாவில் மீண்டும் ஆயுத போட்டி ஏற்படும் அபாயம் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

## யூகோஸ்லாவியாவின்

# செர்பியர் வாழும் பகுதிமீது ஐ.நா. பொருளாதாரத்தடை

(பெல்கிரேட்)

பொஸ்னியா - கர்சகோவியாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஐ.நா.பாதுகாப்பு சபை விதித்திருக்கும் தடையை அடுத்து செர்பிய இன மக்கள் பெரும்பான்மையாக வாழும் யூகோஸ்லாவிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டு, அதன் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

செர்பிய படைகள் பொஸ்னியா - கர்சகோவியா தலைநகர் சரசவியோ, மற்றும் குரோசிய நகரமான துர்கானிக் மீதும் குண்டு மழை பொழிந்த சில மணி நேரத்தில் பாதுகாப்பு சபை எரிபொருள் தடை உட்பட அனைத்து தடைகளுக்கும் அங்கீகாரம் அளித்தது

இத்தீர்மானத்தை பாதுகாப்பு சபையின் பதின்மூன்று உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

# பிலிப்பைன்ஸ் தேர்தல்

[மணிலா]

பிலிப்பைன்ஸில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் அமைப்பு ஒன்று வெளியிட்ட முடிவுகளின் அடிப்படையில் தான் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ராமோஸ் அறிவித்துள்ளார்.

## பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு

# ஹெல உறுமய குழுவினர் 63 பக்க அறிக்கை தாக்கல்

(கொழும்பு)

பௌத்த சிங்கள பேரினவாதப் போக்கைப் பிரதிபலிக்கும் ஹெல உறுமய குழுவினர் அறுபத்து மூன்று பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றைப் பாராளுமன்ற தெரிவு குழுவிடம் கையளித்துள்ளனர் இவ் அறிக்கையில் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் எதுவும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக வடக்கில் புலிகள் இராணுவரீதியாகப் பலவீனப்படுத்தப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சாராரால் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பதற்கென தோற்றுவிக்கப்பட்ட ஹெல உறுமய அணிக்கு நாற்பத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆதரவு அளிப்பதாகவும் தெரியவருகின்றது.

[சென்னை]

தமிழகப் பிரபல பத்திரிகை கல்கி, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் விளம்பர மோகத்தைச் சாடியுள்ளது

''விளம்பரப் பிரியர் என்கிறார்களே, அது என்ன?'' என்ற கேள்விக்கு கல்கி பதிலளித்துள்ளது.

ஜெயந்தி கொண்டாடச் சினிமாத்துறைக்குத் திகதி குறித்துத்தருகிறவர் சென்னை மாநகரச்சுவர்களில் இடமேஇல்லாத அளவிற்கு நாள் தோறும் போஸ்டர் ஒட்டியும் மூலைக்கு மூலை பனர் கட்டியும் போதாமல் ஆயிரக் கணக்கில் செலவளித்து தனியார் நிறுவனங்கள் நிறுத்தியுள்ள விளம்பரப் பலகைகள் மீது தனது போஸ்டர் ஒட்டப் படுவதைப் பார்த்து அதனைக் கண்டிக்காமல் மௌனம் காப்பதன் மூலமே ஆமோதிப்பார்.

— இவ்வாறு கல்கி, ஜெயலலிதா பற்றி எழுதியுள்ளது.

## பிஜி பொதுத்தேர்தலில்

# ஜெனரல் ரம்பூக்கா கட்சி 30 இடங்கள் மட்டும் பெற்றது

பிஜித்தீவில் 1987ஆம் ஆண்டு திடீர் புரட்சி நடைபெற்ற பின் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் இராணுவத் தலைவர் ஜெனரல் சிதவேனி ரம்பூக்கா அதிகளவில் பெரும்பான்மை பெறத் தவறியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எழுபது உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஜெனரல் ரம்பூக்காவின் கட்சியினர் முப்பது இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளனர்.

இதனால் பிஜியில் கூட்டணி அரசு ஒன்றுதான் அடுத்து பதவியேற்கும் எனத் தெரிய வருகின்றது.

# வளைகுடாவில் அமைதிக்கு இந்தியாவின் உதவி தேவை

(மனாமா)

பாரசீக வளைகுடாப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியை பஹ்ரெயின் நாடியுள்ளது.

அண்மையில் இந்தியாவின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பஹ்ரெயின் தலைநகர் மனமாவிற்குப் போய் சேர்ந்தபோது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் முழுநேர ஊரடங்கு

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இந்திய எல்லையுடன் ஒட்டியுள்ள கர்பார்க் மாவட்டத்தில் முழுநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் இந்திய எல்லையிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு வரையிலான பகுதி எங்கும் வாகனப் போக்குவரத்திற்கும் பாதசாரிகளுக்கும் கூட பாகிஸ்தான் இரண்டு மாதங்களுக்கு தடை விதித்துள்ளது

## பாகிஸ்தானால் கடத்தப்பட்ட

# இந்திய ராஜதந்திரி நாடு திரும்பினார்

பாகிஸ்தானில் பொலிசாரால் கடத்திச் செல்லப்பட்டு தாக்குதலுக்குள்ளாகிய இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி ரஜேஸ்மித்தல்நேற்று முன்தினம் தனிப் பயணிகள் விமானம் மூலம் புதுடில்லி கொண்டு வரப்பட்டார்.

# பாதுகாப்பு வரியினால் பால்மா விலை அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புவரி அதிகரிப்பு ஊதியங்கள் உயர்த்தப்பட்டமை, டீசல் விலை அதிகரிக்கப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக இறக்குமதியாகும் சகலவிதமான பால்மா வகைகளினதும் விலைகள் இம்மாதம் 28ம்திகதி முதல் இரண்டு ரூபா தொடக்கம் 9ரூபாவரை இவ்விலைகளில் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னர் 51ரூபாவாக விற்கப்பட்ட 400 கிராம் அங்கர் பால்மாவின் விலை தற்பொழுது 56ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது 5 ரூபாவாக விற்கப்பட்ட 400கிராம் நெஸ்பிறே, பால்மாவின் விலை56 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. லக்ஸ்பிறே 500 கிராம் பக்கட் 55ரூபாவில் இருந்து 64 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது கவ் அன் கேட், உட்பட குழந்தைகள் பால்மா வகைகளின் விலைகள் ஏறக்குறைய 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது (பா)

ஈழநாதம்

தம்பலகாமத்தில்

# தமிழர் நிலங்களில் சிங்களவர் விவசாயம்

(தம்பலகாமம்)

வன்செயல் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக தம்பலகாமம் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய இடங்களில் சிங்களவர் குடியேறி அவர்கள் வேளாண்மை செய்வதற்கு இராணுவம் உதவியளிப்பதாக தமிழ் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீளவும் அங்கு குடியமர்ந்து வாழும் தமிழ் அகதிகள் நிவாரணம் இன்றி அல்லல்படும் இவ் வேளையில் எப்படியாவது வேளாண்மையில் ஈடுபட வேண்டும் எனவும் திருமலை இராணுவ அதிகாரி வலியுறுத்தியுள்ளாராம்.

இதையடுத்து ஒக்ஸ்பாம் நிறுவனம் 150 குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் மட்டும் நெற் செய்கையில் ஈடுபடுவதற்கு உதவுவதாகவும் எனினும் செலவு பணமாக வழங்கப்படாது எனவும், உழவு, கிருமி நாசினி, பசளை, விதை நெல் போன்ற அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை நம்பி வேளாண்மைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட தமிழ் விவசாயிகளுக்கு இன்னும் தண்ணீர் வந்து சேரவில்லை என அங்குள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது வயல் செய்கைக்காக விட்ட நீரை மறித்து தமது நிலங்களுக்கு பாய்ச்சி குடியேற்றப்பட்ட சிங்களவர் உழவு செய்கிறார்களாம். இதனால் தமிழ் விவசாயிகளின் வேளாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எதுவித நிவாரணமும் இன்றி பரிதவிக்கும் தமிழ் அகதிகள் மேலும் கஷ்டமுறு நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் தொண்டர் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த உள்ளனர்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் மேற்படி இரு மாவட்டங்களினதும் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கல்விச்சேவை ஆணைக்குழு அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

கல்விச்சேவைகள் ஆணைக்குழு தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இச் சந்திப்பு இடம்பெற இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பூநகரியில் இராணுவத்திடம் சிக்கிய வாகன இலக்கம்

பூநகரிப் பகுதியில் இராணுவநடவடிக்கை காரணமாக இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள வாகனங்களில் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள, இல்லாத வாகனங்களின் இலக்கங்கள் யாழ். செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

வான் - 29/7283, 29/8160

லொறி 22/0972 24/1350, 26/0815, 26/3947, 26/4019 26/4533, 26/9554 26/9956, 27/2788, 27/6106, 27/7785, 27/9224, 26/9573 28/2883 28/4169, 28/8871, 28/8957, 30/3869 40/3700, 41/7401 42/6199.

பஸ் - 29/1955, 29/4589, 30/3806, (பா)

## மன்னிப்பு கோருவதுஎன்று சுதந்திரக்கட்சி தீர்மானம்

கடந்த வாரம் சபாநாயகர் எம். எச். முகமதுவுக்கு எதிராக சில சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சில அவதூறான வார்த்தைகளை பிரயோகித்தமை தொடர்பாக சபாநாயகரிடம் மன்னிப்புக் கோருவதற்கு சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

## வலிகாமத்தில் ஊரடங்கு

வலிகாமம் பகுதியில் நேற்று காலை 6-00 மணி முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## போரூட்குழு யாழ் வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்படும் குளங்களை பார்வையிட 'போரூட' ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வர உள்ளது.

இக்குழுவினர் கடந்தமாதம் யாழ்ப்பாணம் வந்து குளங்களின் அபிவிருத்தி வேலைகளை பார்வையிட்டுச் சென்றமை தெரிந்ததே (பா)

## திரிபோஷா எடுத்துவரமுயற்சி

கொழும்பிலிருந்து யாழ் மாவட்டத்திற்குத் தேவையான திரிபோஷா மாவை எடுத்து வருவதற்கான நடவடிக்கையை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

## கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்ட கல்வி வளர்ச்சிக்காக கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியமொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அம் மாவட்ட பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட தட்டுப்பாடு ஆகியவற்றால் மாணவர் கல்வியில் ஏற்படும் தடங்கல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்த நம்பிக்கை நிதியம் பயன்படுத்தப்படும்.

## ஆஸ்பத்திரிகள்

றன. இத்தாக்குதலின் போது குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

இறுதியாக தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைமீது வீசிய குண்டினால் இவ் வைத்தியசாலையின் முக்கிய பகுதிகள் பல பலத்த சேதத்திற்குள்ளாகின.

இதன்போது அங்கு தங்கியிருந்த நோயாளர்களும், ஊழியர்களும் பதுங்கு குழிக்குள் பாதுகாப்பைத் தேடிக் கொண்டதால் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினர்.

## வலி. வடக்கில் காய.

மீது நேற்றுக்காலை முதல் மாலை வரை இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன பலாலி இராணுவ முகாமிலிருந்து எறி

# மண்டூர் படுகொலைகளுக்கு அரசபடைகளே காரணம்

### சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 14-ம் திகதி மட்டக்களப்பு பகுதியிலுள்ள மண்டூரில் நடந்த பயங்கர சட்ட விரோத படுகொலைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை அதன் ஏப்ரல் 28 ம் திகதியிடப்பட்ட அறிக்கையொன்றில் பல தகவல்களை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் அரசபடைகளுடன் இணைந்து செயற்படும் இயக்கத்தவர்களே மண்டூர் வாசிகளான தம்பிமுத்து கருப்பையா, அவரது மனைவி இரு ஆண் மூன்று பெண்குழந்தைகளையும் அயலவர் ஒருவரையும் கொலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாரபட்சமில்லாத முழு விசாரணைக்கு அரசு உத்தரவிட்டு சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அறிக்கையில் கேட்டுள்ளது.

# சிறில. காவல் நிலையங்களில் சித்திரவதை சாதாரணம்



(கொழும்பு)

சிறிலங்காவில் பொலிஸ் காவலில் சித்திரவதைகள் சாதாரணமாகவே நடைபெறுகிறது என்றும், பதிவேடுகளில் குறிப்பிடாது பொலிஸ் நிலையங்களில் மறித்து வைத்திருப்பது பற்றியும் ஏசியா வாச் என்ற மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கை ஒன்று சுட்டிக்காட்டுகிறது

1983இல் தமிழர் பிரச்சினை தொடர்பாக நடைமுறைக்கு வந்த அவசரகாலச்சட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்து அனைத்துலக மனித உரிமைச் சட்டத்தை சிறிலங்கா மதிப்பதாக கூறுவதை மதிப்பிளக்கச் செய்வதாகவும் ஏசியா வாச் கூறுகிறது

பொது மக்கள்மீது மனித உரிமைகள் மீறல் நடைபெறா வண்ணம் சிறிலங்கா அரசு புதிய காப்புநடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளதை ஏசியா வாச் வரவேற்கும் அதே வேளை படையினரால் மனித உரிமைகள் மீறப்படும்போது முறைப்பாடுகள் எவ்வளவு தூரம் வரவேற்கப்படுகிறது என்பதிலேயே அரசு வழங்கும் காப்பு நடவடிக்கைகளின் வெற்றி தங்கியிருக்கிறது என்றும் சந்தேகம் தெரிவிக்கிறது

சிறிலங்காவுக்கு உதவி புரியும் நாடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியதிலிருந்து அரசு பாதுகாப்பு நடவடிக்கைப் பிரிவுகளை ஏற்படுத்தியது. ஆனால் இன்றும் கூட பாதுகாப்புப்படைகள் கைது செய்தவர்களின் பெயர்களை பதிவேட்டில் பதியாது ஆட்களைப் பிடிக்கலாம். அடைத்து வைக்கலாம். பொலிஸ் நிலையங்களில் சித்திரவதை என்பது பழகிப்போன சாதாரணமான நிகழ்ச்சி என்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் வருத்தம் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு ஐநா மனித உரிமைகள் அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டது 1983 இல் இருந்து 12 000 பேரைக் காணவில்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது. இதற்குப் பொறுப்பு பாதுகாப்புப் படைகளே என்றும் அது கூறுகிறது. வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு காணாமற் போனவர் விபரம் ஐநா திரட்டியதில்லை.

சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அரசு அதிகாரிகள் புரியும் நடவடிக்கைகள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டோர் நட்டஈடு பெறும் உரிமையைக்கூட சிறிலங்காவில் நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டம் இல்லாமலாக்கி விடுகிறது என்றும். இந்தச் சட்டங்களே மனித உரிமை மீறலுக்குத் துணை போவதாகவும் வாஷிங்டனை மையமாகக் கொண்டியங்கும் ஏசியா வாச் குறிப்பிடுகிறது.

சட்டத்தின் முன் அல்லது நீதிமன்றத்தின் முன் மனித உரிமை மீறல் சம்பவங்கள் கொண்டு வரப்படும்வரை அரச அதிகாரிகள் அவசரகாலச் சட்டத்தின் நிழலில் ஒதுங்குகிறார்கள் என்றும் மனித உரிமை மீறல்களைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்றும் ஏசியா வாச் எச்சரிக்கின்றது

## வீரச்சாவு

மோதலில் நேற்று விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை அறிவொளி (நாகரத்தினம் கிருபா உருத்திரபுரம் கிளிநொச்சி)

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் வீரவேங்கை முகிலன் (பாண சிதம்பரநேசன் தேவராசா- கல்லுண்டாய் வைரவர் கோயிலடி நவாலி தெற்கு மானிப்பாய்) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார். இவர்

## வெளிநாட்டுநாணயகடத்தல் சந்தேக நபர் சரண்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிடிபட்ட ஒரு கோடி ஐம்பது லட்சம் பெறுமதியான வெளிநாட்டு நாணயக் கடத்தல் முயற்சியில் பிரதான சந்தேகநபர் தனது சட்டத்தரணியின் ஊடாக நேற்றுக் காலை சுங்க அதிகாரியிடம் சரணடைந்தார்.

இந்தக் கடத்தல் தொடர்பாக ஏற்கனவே ஐந்து பேர் பிடிபட்டுள்ளார்கள்.

சிங்கப்பூருக்கு நண்டுகளை ஏற்றுமதி செய்யும் கூடையில் மேற்படி தொகை நாணயத்தைக் கடத்திச் செல்வதற்காக முயற்சி செய்ததை இந்தச் சந்தேகநபர்கள் விசாரணையின்போது ஒத்துக் கொண்டார்கள். இந்தக் கடத்தல் மோசடியில் சந்தேக நபராக இருப்பவர் கடலுணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உள்ளூர் நிறுவனத்தின் பணிப்பாளர் என்று

## மாட்டுவண்டி சில்லு ஏறி குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

மாட்டுவண்டிச் சில் ஏறி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

வவுனியா கட்டையர் குளம் பகுதியில் மாட்டுவண்டியைச்

## சூறாவளி...

## சுழல்காற்று

யைச் சேர்ந்த முப்பதை...

கடந்த வாரம் சபாநாயகர் எம். எச். முகமது வுக்கு எதிராக சில சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சில அவதூறான வார்த்தைகளை பிரயோகித்தமை தொடர்பாக சபாநாயகரிடம் மன்னிப்புக் கோருவதற்கு சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

## சுதந்திரக்கட்சி முடிவு புலிகளைப் பலப்படுத்துமாம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்க எடுத்த முடிவு புலிகளின் நிலையைப் பலப்படுத்தும் என்று பிலுள்ள தமிழ்க்குழுக்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## உப்பு உற்பத்தி செம்மணியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழீழ அவ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இம் முயற்சியின் முதற்கட்ட உற்பத்தி கடந்த வாரம் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 30 பாத்திகளில் இவ் உற்பத்திக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலிருந்து மாதமொன்றுக்கு சுமார் 60 மெற்றிக் தொன் உப்பு பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது சுமார் 40 தொழிலாளர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். அதேவேளை இம் முயற்சியை மேலும் விஸ்தரிப்பதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது (க)

### வலிவடக்கிலிவீரச்சாவு

ப்பு), லெப்டினன் நற்குணம் (திரோஜன் சன்முகநாதன் யோகநாதன் பருத்தித்துறை வீதி நல்லூர் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அம்புலன்ஸ் மீது

மூலம் பலாலியில் உள்ள இராணுவ அதிகாரிகளை வினவிய பொழுது அங்குள்ள அதிகாரிகள் இத் தாக்குதல் நடைபெறவில்லையென மறுத்து விட்டனர். பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கொழும்பில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளுக்கு இத்தாக்குதல் குறித்து தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. [பா]

### நேற்று

தனர் சுன்னாகம், மல்லாகம் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் போது சிவஞானம் சிவ பாக்கியம் (வயது 32) சண்முகம் பரமேஸ்வரி (வயது45) சி.சண்முகம் (வயது 50) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

மேலும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் மீதான குண்டு வீச்சின்போது படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் இருவர் பலியாகினர். இவர்களில் ஒருவர் 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் மற்றவர் 16 வயது மதிக்கத்தக்க யுவதி ஆவார். இவர்கள் இது வரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப் படுகிறது

## குடும்பஸ்தர் பலி!

(வவுனியா)

மாட்டுவண்டிச் சில் ஏறி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

வவுனியா கட்டையர் குளம் பகுதியில் மாட்டுவண்டியைச் செலுத்திச் சென்றவர், தவறி வீழ்ந்ததில் சக்கரத்தில் நசிபட்டு இறந்தார்.

முதலில் படுகாயமடைந்திருந்த இவர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சமயம் கடந்த 27 ஆம் திகதி இறந்தார்.

சிரமனானந்தன் (36) என்ற இளம் குடும்பஸ்தரே இறந்தவராவார். (தி)

## பொதுக்கூட்டம்

தமிழர் நலன்காக்கும் ஒன்றிய பொதுச்சபை உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று மாலை 2.00 மணிக்கு பாலம் பொதுப் பணி மன்றத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்திற்கு அழைக்கப்படுகின்றனர்.

### கட்டுவனில்

நடாத்தப்பட்டன.

இவ்வாறான தாக்குதல்களுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கெதிராக சளைக்காமல் கடும் எதிர்த்தாக்குதல்களைத் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல்களையடுத்து இராணுவத்தினர் நகர முடியாது தமது முன்னைய நிலைகளில் இருந்தபடியே தாக்குதல்களை நடாத்தினர். நேற்று மாலை 4 30 மணியின் பின்னர் மோதல்கள் சற்றுத் தணிந்திருந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

### யாழ். நகரில்

ஞானசீலன் [20 வயது] வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் அ குருநாதன் [30 வயது] கோயில் வீதி நல்லூர் மு.சின்னத் தம்பி (70 வயது)பலாலி வீதி யாழ்ப்பாணம் ஆகியோர் யாழ் போதனாவைத்தியசாலைக்கு சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். [பா]

கொண்டதால் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினர்.

### வலி. வடக்கில் காய.

மீது நேற்றுக்காலை முதல் மாலை வரை இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன பலாலி இராணுவ முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதல்களும், காவலரண்களிலிருந்து பீரங்கி மற்றும் கவிபர்த் தாக்குதலும் நடைபெற்ற அதேவேளைசிறிலங்கா விமானப்படையினரின் சிறிய ரக குண்டுவீச்சு விமானங்கள், வை-8 ரக விமானங்கள், வை-12 ரக விமானங்கள் மற்றும் உலங்குவானூர்தி ஆகியவை வானிலிருந்து பரவலாக பல்வேறு இடங்களில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இத் தாக்குதலினால் துர்க்காபுரத்தைச் சேர்ந்த அ. அருணநாதன் (வயது 15), ஆ. மேனகா (வயது 11), எஸ். செல்வரத்தினம் (வயது 36), ஐயப்பிள்ளை (வயது 55), ந. சரஸ்வதி (வயது 45), எஸ். ரட்ணம் (வயது 50), எஸ். சிவ செல்வராணி [வயது 43] ரஞ்சினி [வயது 15], ரி சசிகலா [வயது 23]. ஆர். சிறிரங்கநாதன் [வயது 40], சி சுபாசினி [வயது 11], சி ஆச்சிப்பிள்ளை [வயது 67]. சு. சத்தியசீலன் [வயது 21], க. செல்வவதனி [வயது 20], திலகவதி [வயது 42] ரட்ணம் [வயது 54] என். குணசிங்கம் [வயது 48]. வி. பசுபதி [வயது 57], த. சிவ செல்வராணி [வயது 43], ஏ செல்வராணி [வயது 19], வி. தர்மசீலன் [வயது 30], எஸ். சிவாஜினி [வயது 11], றமேஸ் [வயது 20], எஸ். செல்வரட்ணம் [வயது 36] எஸ். சத்தியசீலன் [வயது 28]. றஜிதா [வயது 17], கண்மணி [வயது 72]. ரி பாலசௌரி [வயது 17]. சண்முக வடிவேல், எஸ் முருகேசு [வயது 51], எஸ் கந்தசாமி [வயது 44], கனகம்மா [வயது 76], க. கணபதிப்பிள்ளை [வயது 54], எஸ் சிவா [வயது 21]. வே. தர்மசீலன் [வயது 30], பரமானந்தம் [வயது 65] க. கதிரமலை [வயது 42] எஸ். றதீசன் [வயது 6] எஸ் ரட்ணம [வயது 54] ஆகியோர் உட்படமேலும் சிலர் காயமடைந்தனர். [க, ச, பா]

நடைபெற்ற மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் வீரவேங்கை முகிலன் (பாண சிதம்பரநேசன் தேவராசா-வல்லுண்டாய் வைரவர் கோயிலடி நவாலி தெற்கு மானிப்பாய்) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### வலி. வடக்கில்

ங்கா இராணுவ முகாம்களில் இருந்து பரவலான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் இப்பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

மல்லாகம் தேரம்பல வைரவர் கோவிலடியில வீழ்ந்து வெடித்த இரு எறிகணைகளால் இப்பகுதியைச் சேர்ந்த இருவர் வியாபாரிகள் ஆரண்டு வீடுகளும் பலத்தசேதமடைந்தன இந்த எறிகணை வீச்சு சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது. இதனைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளை வட்டமிட்ட உலங்குவானூர்திகள் சரமாரியான கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டன.

இக்கலிபர் தாக்குதல்களினால் இருபதிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இக் கலிபர் தாக்குதல் மாலை நான்குமணி வரை நீடித்தது. இது பெரும்பாலும் பிரதான வீதிகளையும்குறுக்குவீதிகளையும் குறியாகக் கொண்டு காயமடைந்தவர்களை ஏற்றி வரும் வாகனங்கள் மீதே தாக்குதல்களை நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

### பீப்பாக் குண்டுவீச்சு

காலை 10 30 மணிக்கு கன்னாகம் பகுதிக்கு விரைந்து வந்த வை- 2,வை-8 ரககுண்டு வீச்சு விமானங்கள் அப் குதி வர்த்தக நிலயங்கள் மீது மூன்று பீப்பாக் குண்டுகளை வீசின. இதனால் இப்பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் பலியானார். பத்திற்கு மேற்பட்ட கடைகள் பலத்தசேதமடைந்தன. இதில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாக வீழ்ந்த முதலாவது குண்டு வெடிக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணியிடமாக நேற்றுக் காலை சுங்க அதிகாரியிடம் சரணடைந்தார்.

இந்தக் கடத்தல் தொடர்...

### சுழல்காற்று

யை நிறுவுவித்த முப்படைத் தளபதிகளும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

### வடக்கில் 3 நாள்

இராணுவ அதிகாரியாவார்.

இத்தவேளை இப்பகுதியில் இடம்பெற்ற சண்டைகளில் ஒரு சீன டாங்கி முற்றாக நாசமாகியது. முல்லைத்தீவில் இடம்பெற்ற சண்டைகளில் இரண்டு சீன டாங்கிகள் முற்றாகத் தகர்க்கப்பட்டன.

### யாழ்.

உள்ள பொது இடங்களிலும், மரங்களின் கீழும் வீதி ஓரங்களிலும் அதிகாலை வேளை அமர்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது

இத்தவேளை குருநகர் பகுதியிலிருந்து வீடுகளை விட்டு வெளியேறியவர்களில் அநேகர் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் நேற்றுக்காலை தஞ்சம் புகுந்தனர்.

காலை 7 - 30 மணியளவில் மண்டைதீவுக் கடலில் நின்ற கடற்படை ரோந்து படகிலிருந்தும் பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்பட்டது. காலை 9-30 மணிக்கு வந்த உலங்கு வானூர்தி ஒன்று அதியுயரத்தில் குருநகர், கச்சேரி, பாஷையூர், கொழும்புத்துறை, குடாக்கடல் பிராந்தியத்திற்கு மேலாக பல தடவைகள் சுற்றிச்சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

அதேவேளை அராலி தெற்குப்பகுதி மீதும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன இதனால் அப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை நவாலிப் பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்தனர் அத்துடன் காரைநகரில இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தது. இப்பகுதி மக்களும் பாதுகாப்பான இடங்களை நாடி இடம்பெயர்ந்தனர். (க) (ச) (பா) (21)

இந்தச் சந்தேகநபர்கள் விசாரணையின்போது ஒத்துக் கொண்டார்கள். இந்தக் கடத்தல் மோசடியில் சந்தேக நபராக இருப்பவர் கடலுணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உள்ளூர் நிறுவனத்தின் பணிப்பாளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி பல காலமாக நடைபெற்று வந்துள்ளது என்று சுங்கப்பகுதி அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

### தெல்லிப்பழை

முற்றாகச் சேதமடைந்துள்ளன பனைமரங்கள் பல முறிந்து வீழ்ந்து கிடக்கின்றன. மேற்படி ஆலய பராமரிப்பில் இருந்த இவ் அகதிகள் ஆலயத்துள் தஞ்சமடைந்திருந்ததினால் இத்தாக்குதல் வீச்சினால் ஏற்பட இருந்த உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இறுதியாக ஆலய வடக்கு மூலையில் வீசப்பட்ட குண்டு வீழ்ந்து வெடித்ததினால் ஆலயசப்ரம் சிதறிய நிலையில் காணப்படுகிறது. தேர் முட்டி பலத்த சேதமடைந்தது.

### இரத்த வெள்ளத்தில் மக்கள்

விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை முடித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றதும் ஓடிச்சென்று ஆலயத்தினுள் நுழைந்தபோது இருபதிற்கு மேற்பட்டோர் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கே உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த அனைவரும் வாகனங்களில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சிகிச்சை பலனளிக்கப் பெறாது மூவர் பலியாகினர். இவர்கள் காயமடைந்த கோபுரத்தின் அடியில் நுழைவாயிலிலிருந்து முனிமண்டபம வரை இரத்தத்தால் தோய்ந்து கிடந்தது

மேற்படி ஆலயத்தின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தின் மீது வீசிய மற்றொரு குண்டினால அந்த ஆலயம் தரைமட்டமாகியுள்ளது அதன் விக்கிரகங்கள் யாவும சிதறிக் காணப்படுகின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.